# மூன்றாம் திருப்புதல் தேர்வு - 2014

10 - ஆம் வகுப்பு

## சமூக அறிவியல்

காலம் : 2.30 மணி

பிரிவு - I (பகுதி - 1)

மதிப்பெண்கள் : 100

குறிப்பு : 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

14 X 1 = 14

1. ஆங்கில கிழக்கிந்திய வணிகக் குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
   அ) கி.பி. 1600 ஆ) கி.பி. 1664 இ) கி.பி. 1644 ஈ) கி.பி. 1700
2. முதல் உலகப்போரை முடிவுக்கு கொண்டு வந்த உடன்படிக்கை
   அ) லண்டன் அமைதி மாநாடு ஆ) ரோம் அமைதி மாநாடு
   இ) பெர்லின் அமைதி மாநாடு ஈ) பாரிஸ் அமைதி மாநாடு
3. பொருளாதார பெருமந்தம் தோன்றிய நாடு
   அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) பிரான்சு ஈ) ஜெர்மனி
4. 1857 பெரும் புரட்சியின் போது இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்தவர்
   அ) லிட்டன் பிரபு ஆ) ரிப்பன் பிரபு இ) கானிங் பிரபு ஈ) வெல்லெஸ்லி பிரபு
5. இந்தியா அதிகப்படியான நம்பிக்கை கொண்டிருப்பது
   அ) போர் ஆ) அமைதி இ) அன்பு ஈ) பகைமை
6. எதிர்கட்சி தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து
   அ) காபினட் அமைச்சர் ஆ) இணை அமைச்சர் இ) மாநில அமைச்சர் ஈ) அமைச்சரவை அமைச்சர்
7. தேம்பாவணியோடு தொடர்புடையது
   அ) இந்து மதம் ஆ) சீக்கிய மதம் இ) கிறித்துவ மதம் ஈ) இஸ்லாம்
8. இந்தியாவின் மிக உயரமான சிகரம் ...........
   அ) எவரெஸ்ட் சிகரம் ஆ) காட்வின் ஆஸ்டின் இ) கஞ்சன் ஜங்கா ஈ) தவளகிரி
9. தென்மேற்கு பருவகாற்று திசைக்கு இணையாக அமைந்துள்ள மலைகள் ..........
   அ) ஆரவல்லி ஆ) சாத்பூரா இ) விந்தியா ஈ) மைக்காலா
10. வறட்சியிலும் வளரும் பயிர் ..........
    அ) நெல் ஆ) கோதுமை இ) சணல் ஈ) தினை வகை
11. பொருளை கண்டுபிடிக்கும் வழிமுறையை ........ என்றழைக்கிறோம்.
    அ) இலக்கு ஆ) மூலம் இ) உணரி ஈ) பதிமம்
12. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது ...........
    அ) மக்களின் செல்வ நிலையை ஆ) மக்களின் ஏழ்மை நிலையை
    இ) மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஈ) மக்களின் கல்வி நிலையை
13. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர்
    அ) ஜெயபிரகாஷ் நாராயண் ஆ) ஜவஹர்லால் நேரு இ) ஆச்சார்ய வினோபாவே ஈ) டாக்டர் ராஜேந்திர பிரசாத்
14. 2011 - ஆம் ஆண்டு மக்கட் தொகை கணக்கெடுப்பின் படி இந்தியாவில் எழுத்தறிவு பெற்றோர் எண்ணிக்கை
    அ) 74.04 % ஆ) 65.8% இ) 66.8% ஈ) 67.8%

### பகுதி - II

15. குறிப்பு : இரு வினாக்களுக்கும் விடையளிக்கவும். பொருத்துக. 2 X 5 = 10

i)

| | | | |
|---|---|---|---|
| அ) | கூட்டாட்சி ரிசர்வ் வங்கி | - | உத்திர பிரதேசம் |
| ஆ) | கேசரி | - | காமராஜர் |
| இ) | சௌரி சௌரா | - | கடனுதவிகள் |
| ஈ) | அரசை உருவாக்கியவர் | - | ஈ. வெ. ராமசாமி பெரியார் |
| உ) | வைக்கம் வீரர் | - | பால கங்காதர திலகர் |

ii)

| | | | |
|---|---|---|---|
| ஊ) | கேரளாவில் உள்ள பெரிய ஏரி | - | உத்திர பிரதேசம் |
| எ) | அதிக மழை பெறும் பகுதி | - | பஞ்சாயத்து |
| ஏ) | சணல் | - | மௌசின்ராம், சிரபுன்ஜி |
| ஐ) | இந்தியாவின் சர்க்கரை கிண்ணம் | - | மேற்கு வங்கம் |
| ஒ) | கிராமச் சாலைகள் | - | வேம்ப நாடு |

### பிரிவு - II (மதிப்பெண்கள் : 20) பகுதி - I

II குறிப்பு : i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு சிறுவிடை தருக. ii) பகுதி - I ல் நான்கு வினாக்கள் பகுதி - II -ல் ஒரு வினா, பகுதி - III -ல் நான்கு வினாக்கள் & பகுதி - IV -ல் ஒரு வினாவும் தேர்வு செய்க.

10 X 2 = 20

16. தைப்பிங் கலகம் பற்றி எழுதுக.
17. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?
18. மியூனிச் உடன்படிக்கை சிறுகுறிப்பு தருக.
19. ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை?
20. பெரும் புரட்சியில் ஈடுபட்ட முக்கியத் தலைவர்கள் மற்றும் முக்கிய இடங்களை குறிப்பிடுக.
21. ஆரிய சமாஜத்தின் பணிகள் யாவை?
22. சுப்பிரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக.
23. சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்கள் யாவை?

### பகுதி - II

24. உலக அமைதி ஒரு அவசியமானது ஏன்?
25. இந்தியாவில் உள்ள சில சமயங்களின் பெயர்களை குறிப்பிடுக.

### பகுதி - III

26. இந்தியத் தீவுக் கூட்டங்கள் யாவை?
27. பருவக் காற்று என்பதன் பொருள் யாது?
28. சணல் தொழிற்சாலையின் உப உற்பத்திப் பொருட்கள் யாவை?

29. இந்தியாவில் மைக்கா உற்பத்தியாகும் இடங்கள் யாவை?
30. தினைவகைப் பயிர்கள் எங்கு ஏன் பயிரிடப்படுகின்றன?
31. நீர் மாசடைதல் என்றால் என்ன?
32. குழாய் போக்குவரத்தின் நன்மைகள் யாவை?
33. உலக அமைவிடங்கள் கண்டறியும் தொகுதியின் பயன்கள் இரண்டினைக் கூறு.

பகுதி - IV

34. தலா வருமானம் என்றால் என்ன?
35. தனியார்மயமாதல் என்றால் என்ன?

**பிரிவு - III (மதிப்பெண்கள் : 8)**

**குறிப்பு : ஏதேனும் நான்கினை வேறுபடுத்தி காட்டுக.** 4 X 2 = 8

36. கிரீன்விச் தீர்க்க நேரம் - இந்திய திட்ட நேரம்.
37. லூ - நார்வெஸ்டர்ஸ்.
38. புதுப்பிக்கக் கூடிய வளம் - புதுப்பிக்க முடியாத வளம்.
39. கோடை மற்றும் குளிர்காலப் பயிர்கள்.
40. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் - கனிமம் சார்ந்த தொழிலகங்கள்.
41. நீர்மாசடைதல் - நிலம் மாசடைதல்.
42. ஏற்றுமதி - இறக்குமதி.
43. உள்நாட்டு வணிகம் - பன்னாட்டு வணிகம்.

**பிரிவு - IV (மதிப்பெண்கள் : 8)**

III **கீழ்கண்ட தலைப்புகளில் இரண்டினைத் தேர்ந்தெடுத்து அவற்றின் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

44. **ஜெர்மனியின் பேராசை** 2 X 4 = 8
    அ) முதல் உலகப் போரின் போது ஜெர்மனியின் அரசர் யார்? ஆ) அவரின் நம்பிக்கை என்ன?
    இ) அவரால் சகித்துக் கொள்ள முடியாதது எது? ஈ) எங்கு கப்பற்படைத்தளம் அமைத்திருந்தார்?
45. **பாசிசக் கட்சி**
    அ) பாசிசக் கட்சியைத் தோற்றுவித்தவர் யார்? ஆ) முசோலினியின் முழக்கம் பற்றி எழுதுக.
    இ) பாசிசத்தின் நோக்கங்கள் என்ன? ஈ) பாசிசத்தின் குறிக்கோள் என்ன?
46. **மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி**
    அ) மத்திய இந்திய புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?
    ஆ) இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது?
    இ) இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன? ஈ) தாந்தியா தோபு செய்தது என்ன?
47. **மவுண்ட்பேட்டன் திட்டம்**
    அ) 1947 - ஆம் ஆண்டு இந்திய கவர்னர் ஜெனரலாகப் பதவியேற்றவர் யார்?
    ஆ) ஆங்கிலேய கடைசி கவர்னர் ஜெனரல் யார்? இ) மவுண்ட்பேட்டன் திட்டம் என்றால் என்ன?
    ஈ) மவுண்ட் பேட்டன் திட்டத்திற்கு காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் பிரதிபலிப்பு என்ன?

**பிரிவு - V (மதிப்பெண்கள் : 20) பகுதி - 1**

IV **குறிப்பு : ஒவ்வொரு வினா எண்ணிலும் உள்ள மூன்று வினாக்களில் ஒன்றினைத் தேர்வு செய்து நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும்.** 4 X 5 = 20

48. அ) முசோலினியின் தீவிர வெளியுறவுக் கொள்கை பற்றி எழுதுக. (அல்லது)
    ஆ) இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் யாவை? (அல்லது) இ) உப்புசத்தியாகிரகம் - குறிப்பு வரைக.

பகுதி - 2

49. அ) சார்க் அமைப்பு பற்றி சிறுகுறிப்பு எழுதுக. (அல்லது)
    ஆ) தேசிய ஒருமைப்பாடு பற்றி எழுதுக. (அல்லது)
    இ) நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

பகுதி - 3

50. அ) மழை நீர் சேகரிப்பினை விளக்குக. (அல்லது)
    ஆ) இந்தியச் சாலைகளின் வகைகளை விவரி. (அல்லது)
    இ) தொலை நுண்ணுணர்வு நுட்பத்தின் தொகுதிகளை விவரி.

பகுதி - 4

51. அ) நாட்டு வருமானத்தின் இரண்டு அடிப்படை கருத்துக்களை விவரி (அல்லது)
    ஆ) பசுமை புரட்சியை விளக்குக. (அல்லது)
    இ) தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

**பிரிவு - VI (மதிப்பெண்கள் : 5)**

**குறிப்பு : கீழ்கண்டவற்றுக்கு காலக்கோடு வரைக.** 5

52. 1885 முதல் 1920 ஆம் ஆண்டுகள் வரை நடைபெற்ற ஏதாவது ஐந்து முக்கிய நிகழ்வுகள்

**பிரிவு - VII (மதிப்பெண்கள் : 15)**

**குறிப்பு : வரைபட வினாக்கள் :**

53. **அ) ஆசிய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறிக்கவும்.** 5
    i) காண்டன் ii) துருக்கி iii) தைவான் iv) சாகலின் தீவுகள் v) தென் கொரியா **(அல்லது)**
    **ஆ) இந்திய வரைபடத்தில் கீழ்கண்டவற்றினை குறிக்கவும்.**
    i) மீரட் ii) கான்பூர் iii) பராக்பூர் iv) ஜான்சி v) வேலூர்
54. **கொடுக்கப்பட்ட இந்திய வரைபடத்தில் ஏதேனும் பத்து இடங்கள் / பகுதிகள் குறிப்பிடுக.** 10
    i) பிரம்மபுத்திரா சமவெளி ii) மேற்கு தொடர்ச்சி மலை iii) விசாகப்பட்டினம் iv) பிலாய்
    v) பெங்களூர் vi) டெல்லி-கொல்கத்தா இருப்புப்பாதை vii) எவரெஸ்ட் சிகரம் viii) மன்னார் வளைகுடா
    ix) நெல் விளையும் பகுதி x) வண்டல் மண் xi) தார்பாலைவனம் xii) 9 மாங்குரோவ் காடுகள்
    xiii) மாளவ பீடபூமி xiv) ஆரவல்லி மலைத்தொடர் xv) இலட்சத் தீவுகள்